# Indonesia UNHCR இல் பதிவு செய்யப்பட்ட நபர்களுக்கு முழுமையான தீர்வுகள்

UNHCR
The UN Refugee Agency

European Union
Humanitarian Aid

## புது பதிவுமுறை

**European Union Humanitarian Aid** (ஐரோப்பிய ஒன்றிய மனிதாபிமான உதவி) இன் நிதி செயல்திட்டத்திற்கமைவாக பதிவுகளை மேற்கொள்ள, புது ஆவணங்களை விநியோகிக்க, அகதி அந்தஸ்த்து நிர்ணயித்தலுக்கு UNHCR **மேலதிக உத்தியோகத்தர்களை** நியமிக்கும்

Indonesia UNHCR இல் பதிவு செய்யப்பட்டவர்களுக்கு வெகு விரைவில் புது அடையாள அட்டை வழங்கப்படும். **அகதி மற்றும் அகதி அந்தஸ்து கோருபவர்களுக்கு ஒரே வகையான அட்டை** வழங்கப்படும். கைவசம் உள்ள அட்டை மற்றும் சான்றிதழ் புது அட்டை கிடைக்கப்படும் வரையில் செல்லுபடியாகும்.

## மீள் குடியேற்றப்படும் இடங்கள் வரையறுக்கப்பட்டுள்ளன

மீள் குடியேற்றம், **அகதிகளுக்கு கிடைக்கப்படும் ஒரு தன்னிச்சையான உரிமை அல்ல**.

உலகளவில் சுமார் 22 மில்லியன் அகதிகள் உள்ளனர், எந்தவருடமும் **இதில் 1% ற்கும் குறைவானவர்கள் மட்டுமே மீள்குடியேற்றப்படுகிறார்கள்.**

மீள்குடியேற்றப்படும் இடங்கள் வரையறுக்கப்பட்டுள்ளன, **Indonesia உள்ள அதிகளவான அகதிகள் மீள்குடியேற்ற சலுகைகளை பெற்றுக்கொள்ள முடியாது**

Indonesia வுக்கான மீள்குடியேற்ற ஒதுக்கீட்டு எண்ணிக்கையை **தீர்மானிப்பது மீள்குடியேற்ற நாடுகள்**, UNHCR அல்ல

மீள்குடியேற்ற இடங்கள் வரையறுக்கப்பட்ட நிலையில், அகதிகள் சனத்தொகையில் மிகவும் அவதானத்துக்கு உள்ளானவர்களுக்கு முதலிடம் கொடுக்கம்படும்.

மீள்குடியேற்றத்திற்கு நபர்களை தெரிவு செய்யும் போது, அவர் Indonesia வில் இருந்த காலம் கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

புகலிடம் கோருவோரின் நிலைமை மிகவும் அவதானமாக இருப்பின் அவர் மீள்குடியேற்றப்பட வேண்டிய ஒருவராயின், UNHCR அவரின் கோரிக்கைக்கு முன்னுரிமை வழங்கும்

உங்களுடைய உறவினர்கள் மூன்றாவது நாடுகளில் இருப்பின், அவர்கள் அங்கு உள்ள அரசாங்கத்தை அணுகி உங்களுக்கும் உங்கள் குடும்பத்துக்கும் எவ்வாறு ஆதரிவளிப்பது(sponsor) என்பது பற்றிய தகவல்களை பெற்றுக் கொள்ள முடியும். பெரும்பாலான நாடுகளில் இவ்வாறான திட்டங்கள் உண்டு. ஆனால் நாட்டுக்கு நாடு நிபந்தனைகள் வேறுபடும். UNHCR தனியார் ஆதரிவளிப்பு செயல்முறையில் பங்குகொள்ளாது. ஆனால் இவ்வாறான வாய்ப்புக்களை பெற்றுக்கொள்வது சம்பந்தமான அறிவுறுத்தல்களை வழங்க முடியும்.

## மாற்று தீர்வுகள்

மீள்குடியேற்ற இடங்கள் இந்தோனேசியாவில் மிகவும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் மாற்று வழிமுறைகள் காணப்படும். உங்களுக்கு பாதுகாப்பாக நாடு திரும்ப முடியுமாயின், நாடு திரும்புதல் என்பன உள்ளடங்கும்.

சொந்த நாட்டு நிலவரங்களை தெரிந்து கொள்ள மற்றும் மாற்று வழிமுறைகளை அறிந்து கொள்ள UNHCRஐ தொடர்பு கொள்ளவும். நாடு திரும்புவது முழுமையாக தனிப்பட்ட முடிவு.

## எதிர்காலத்திற்காக உங்களை தயார் படுத்திக்க கொள்ளவும்

மீள்குடியேற்றத்திற்கான சந்தர்ப்பங்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால், வாழ்க்கையை வலுப்படுத்திக் கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும்.

உங்களிடம் உள்ள சிறப்பு திறமைகளை பயன்படுத்தி ஏனைய அகதிகளுக்கு மற்றும் புகலிடம் கொடுத்தவர்களுக்கும் உதவி செய்ய முன்வாருங்கள்.

விளையாட்டு மற்றும் ஏனைய நன்மை பயக்கக் கூடிய பொழுதுபோக்குகளில் ஈடுபடவும்

ABC

Indonesia மொழியை கற்றுக் கொள்வதன் மூலம், Indonesia மக்களிடையே வரவேற்பை பெற்றுக்கொள்ள முடியும்.

இந்தோனேசிய உள்ளூர் கலாச்சார நிகழ்வுகளில் பங்கேற்கவும்

உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும் கிடைக்கும் கல்வி வாய்ப்புகளை பயன்படுத்தி கொள்ளுங்கள்.

தொழிற்பயிற்சி திட்டங்கள் மற்றும் ஆன்லைன் பல்கலைக்கழக பாடநெறிகளில் பதிவு செய்தல்

பயிற்சி மற்றும் பயிற்சிக்காலம் மூலம் உங்கள் திறமைகளையும் அனுபவத்தையும் விரிவாக்குங்கள்

இந்தோனேசியாவின் சட்டங்கள் மற்றும் கலாச்சாரத்தை மதிக்கவும், நீங்கள் இந்த நாட்டில் விருந்தினராக இருப்பதை நினைவில் கொள்ளவும்.

**இந்தோனேசியாவில் உங்களுக்கும் உங்கள் குடும்பத்திற்கும் கிடைக்கும் வாய்ப்புகளைப் பற்றி மேலும் அறிய UNHCRஐ தொடர்பு கொள்ளவும்.**

**மேலதிக தகவல்களுக்கு at www.unhcr.org/id**